TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051865

1. District மாவட்டம்: விழுப்புரம் PS காவல்நிலையம்: V & AC Year ஆண்டு: 2023 FIR No. மு.த.அ. எண்: 03 Date நாள்: 24.07.2023

2. (i) Act சட்டம்: PC ACT - 1988 as amended by Sections பிரிவுகள்: Sec - 7
(ii) Act சட்டம்: PC ACT (Amended) - 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்: 21.07.2023 Date from நாள் முதல்: Date to நாள் வரை:
Time Period நேர அளவு: 12.15 Time from நேரம் முதல்: Time to நேரம் வரை:
(b) Information Received at PS. Date காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 23.07.2023 Time நேரம்: 17.00
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: 24.07.2023 Time நேரம்: 09.15

4. Type of Information : Written/ Oral தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: சுமார் 21 Km வடமேற்கில்
Beat Number முறைக் காவல் எண்: (b) Address முகவரி: அரியலூர் திருக்கை கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: A. அன்னம்மாள் (b) Father's/ Husband's Name தந்தை / கணவர் பெயர்: அருளாந்து
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி: L.L நகர் கிராமம், அரியலூர் திருக்கை அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

சங்கீதா அரியலூர் திருக்கை கிராம நிர்வாக அலுவலர்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்.

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted: On 23.07.2023 at about 17.00 hrs, while I was in my office, one Tmt.A.Annammal, W/o Arulandhu residing at Tat Nagar Village, Viluppuram Taluk, Viluppuram District approached my detachment office and lodged a written complaint which read as follows:- அனுப்புநர், A.அன்னம்மாள், வயது-70/23, க/பெ.அருளாந்து, டட் நகர் கிராமம், அரியலூர் திருக்கை அஞ்சல், விழுப்புரம் வட்டம் & மாவட்டம். பெறுநர், உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, விழுப்புரம். ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். எனக்கு சுமார் 70 வயதாகிறது. எனது கணவர் அருளாந்து அவர்கள் இறந்து சுமார் 25 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு நான்கு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். நான் தற்போது எனது நான்காவது மகன் மைக்கேல் டிசோஸ் வீட்டில் இருந்து வருகிறேன். எனது மாமனார் மாணிக்கம் மற்றும் எனது கணவரின் அண்ணனான சவரிமுத்து ஆகியோர் சுமார் 35 வருடங்களுக்கு முன்பாகவே இறந்துவிட்டார்கள். அப்போது அவர்களது இறப்பினை பதிவு செய்யவேண்டும் என்ற விப்ரம் தெரியாமல் விட்டுவிட்டார்கள். தற்போது பூர்வீக சொத்து தொடர்பாக அவர்களின் இறப்பு சான்று தேவைப்பட்டதால் எனது இளைய மகன் மைக்கேல் டிசோஸ் விழுப்புரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 19.11.2020-ம் தேதி மாணிக்கம், சவரிமுத்து ஆகியோருக்கு இறப்பு சான்று கேட்டு தனித்தனியே மனுவாக கொடுத்ததில், இருவரின் இறப்பையும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை என சான்று கொடுத்தார்கள். அதன் பிறகு விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம், கடந்த 05.12.2020-ம் தேதி மாணிக்கம், சவரிமுத்து ஆகியோருக்கு இறப்பு சான்று கேட்டு தனித்தனி யேமனுக்கள் கொடுத்தார்...

(Continued in separate sheet)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

அன்னம்மாள்

24/7/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

24.07.2023, 09.45 மணி

Name: பெயர் ம. பாஸ்கர்
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.

அந்த இரண்டு மனுக்களுடன் மனு கொடுத்த என் மகன் மைக்கெல் டிசோஸின் ஆதார் நகல், விழுப்புரம் வட்டாட்சியர் அவர்கள் கொடுத்த மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பு பதிவில்லை சான்று, அன்னியூர் சார் பதிவாளர் அவர்கள் கொடுத்த மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பு பதிவில்லை சான்று, இறப்பினை கால தாமதமாக பதிவு செய்வதற்காக மாவட்ட கருவூலத்தில் ரூபாய்.500/- செலுத்தியதற்கான ஸ்டேட் பேங்கின் சலான் நகல் மற்றும் மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பு சான்று ஆட்சேபனை குறித்த தினசரி பத்திரிக்கையின் விளம்பர நகல் ஆகியவற்றை இணைத்து கொடுத்தார். அதன் பிறகு விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியரால் முறையாக விசாரணை செய்யப்பட்டது. அதன் பின்பு எனது மகன் வேலை காரணமாக 26.05.2023-ம் தேதி அன்று குவைத்துக்கு சென்றுவிட்டார். அதனால் இறப்பு சான்று வாங்குவதற்கான வேலையை என்னை பார்க்க சொன்னார். இதுசம்மந்தமாக நான் விழுப்புரம் தாலுக்கா அலுவலகம் சென்று விசாரித்த போது அங்கு தாலுக்கா ஆபீஸ் வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டது உங்க ஊர் அரியலூர் திருக்கை VAO தான் மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும் அதனால் அவரை நேரில் சென்று பாருங்கள் என்று சொன்னார்கள். அதனால் நான் அரியூலூர் திருக்கை VAO சங்கீதா அவர்களை அவரது அலுவலகத்தில் சென்று பார்த்து மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்வது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் இருவரது இறப்பையும் ஆன்லைனில் பதிவு செய்யவேண்டியது நான் தான் உங்களுக்கு தகவல் சொல்லும்போது வந்து பாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். அப்புறம் நான் 21.07.2023 அன்று மதியம் சுமார் 12.15 மணிபோல அரியூலூர் திருக்கை VAO அலுவலகத்திற்கு சென்று அங்கு பணியில் இருந்த VAO சங்கீதா அவர்களை பார்த்து மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்துவிட்டீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் மனுவ கொடுத்துட்டு கண்டுக்காம இருந்தா எப்புடி இங்க பணம் கொடுத்தால் தான் எந்த வேலையும் நடக்கும், உன் மகன் கொடுத்த ஒவ்வொரு மனுவுக்கும் ரூபாய்.500/- வீதம் மொத்தம் ரூபாய்.1000/- கொடுத்தால் தான் மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை நான் ஆன்லைனில் பதிவு செய்வேன் இல்லை என்றால் உனது மகன் கொடுத்த மனுக்கள் கிடப்பில் தான் இருக்கும் என்று கறாராக சொன்னார். அதற்கு நான் அவரிடம் இந்த பணம் அரசு கட்டணமா இதற்கு ரசீது கொடுப்பீங்களா என்று கேட்டேன். அதற்கு அவர் ரசீதுலாம் கொடுக்கமாட்டேன், அந்த பணம் எனக்குத்தான் என கூறினார். நான் பணத்தை ரெடி செய்து கொண்டு வருகிறேன் என கூறிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். இந்த விபரத்தை வெளிநாட்டில் இருக்கும் எனது இளைய மகன் மைக்கேல் டிசோஸிடம் சொன்னேன். அதற்கு எனது மகன் லஞ்சமாக பணம் கொடுத்து இறப்பு சான்று வாங்க எனக்கு விருப்பம் இல்லை என்று கூறினான். எனக்கும் விருப்பம் இல்லை என்பதை என் மகனிடம் சொன்னேன். அதற்கு அவன் இறப்பு பதிவினை ஆன்லைனில் பதிவு செய்ய லஞ்சமாக பணம் கேட்கும் VAO மீது லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் கொடுக்கலாம் என்று சென்னான். அதற்கு நானும் சரி என்று சொன்னேன். பின்னர் என் மகன் நான் வெளிநாட்டில் வேலையில் இருப்பதால் என்னால் நேரில் வர முடியாது எனவே எனக்கு பதிலாக நீயே விழுப்புரம் லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திற்கு சென்று மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு ரூபாய்.1000/- லஞ்சமாக பணம் கேட்கும் அரியலூர் திருக்கை, VAO, சங்கீதா என்பவர் மீது புகார் கொடு, அதற்கான பணத்தை எனது மனைவியிடம் வாங்கிக்கொள் என்று சொன்னான். அதன்படி எனது மருமகளிடம் ரூபாய்.1000/- பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் எனது மருமகளுக்கு உடல்நிலை சரியில்லாததால் அவருக்கு துணையாக அவருடன் இருந்துவிட்டேன். அதனால் மாணிக்கம், சவரிமுத்து ஆகியோரின் இறப்பினை ஆன்லைனில் பதிவு செய்வதற்கு ரூபாய்.1000/- லஞ்சமாக பணம் கேட்கும் அரியலூர் திருக்கை, VAO, சங்கீதா என்பவர் மீது உரிய நடவடிக்கை

எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள, ஒப்பம் (A.Annammal) நாள்: 23.07.2023 இடம்:விழுப்புரம்.

Sir,

Received the above written complaint on 23.07.2023 at about 17.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Hence, I registered a case in Viluppuram Vigilance and Anti-Corruption Cr.No.3/2023/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.15 hrs today on 24.07.2023 and took up for Investigation.sd xxxxxx on 24.07.2020 (M.Paul Suther) Deputy Superintendent of Police, V&AC, VPM).

The original FIR along with a the original written complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Viluppuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

24/7/2023.

(M.Paul Suther)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Viluppuram.